# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 25

பதிவு எண் : 135/83

பண்பாட்டுக் கழக வெளியீடு
[உறுப்பினர்களுக்கு மட்டும்]

## இராமகிருட்டிணரியல் சிறப்பு மலர்



மெய்ஞ்ஞானக் கொடி





ஞான சித்தர், வேதசித்தர், நவநாத சித்தர்.
அருள்மிகு பகவன் இராமகிருட்டிணபரம அம்சர்

வெளியீடு : 26—1—86 காணிக்கை : ரூ 1-00

# வணக்கவுரை

**(பிறமாச்சாரியார்)**

பதிப்பகத்துறையில் எந்தவொரு புதிய நாளேடோ அல்லது வார இதழோ, [அ] மாத மலரோ [அ] தனிப்புத்தகமோவெளியிடும்பணித் துவக்கப்பட்டால்; அப்பணி தொடர்ந்து ஓராண்டு காலமாவது நிகழ்ந்து நிறைவுபெற்ருல் தான் அணிபெறும். இதன்படி, நாம் நமது குருதேவர் அறிக்கையெனும் மாத இதழை நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினருக்காகவும்; இதன் கீழுள்ள 12-க்கும் மேற்பட்ட நிறுவனங்களைச் சார்ந்தவர்களுக்காகவும்; நமது ஆர்வலர்களுக்காகவும், விருப்பாளர்களுக்காகவும், ஏந்தாளர்களுக்காவும் வெளியிடும் பணியை துவக்கி இரண்டாண்டுகள் நிறைவுபெற்று மூன்ரும் ஆண்டும் துவங்கியுள்ளது. இந்த வெற்றிக்கு மேற் குறிப்பிட்ட அனைவரும் பொறுப்பாவார்கள் என்ற கருத்தினை அனைவரும் உணர வேண்டும், ஒப்புக் கொள்ள வேண்டும். நம்ப வேண்டும். அப்பொழுது தான் இந்த 1986-ஆம் ஆண்டுக்கு சில ஆயிரம் பேர்களை புதிய சந்தாதாரர்களை சேர்க்க முடியும், ஏற்கனவே உள்ள சந்தாதாரர்களை சந்தித்து இந்த ஆண்டுக்குரிய சந்தாவை வசூலிக்க முடியும் இச் செயலினை அனைவரும் பேரார்வத்துடன் செயலாக்க வேண்டும்.

நாம் வெளியிடும் கருத்துக்களும் செய்திகளும் எந்த நிறுவனத்தையும், நிர்வாகத்தையும், தனி மனிதரையும், பாதிக்கும் நோக்குடையன அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! மனித நல நல்வாழ்வுக்காக அனைவரையும் ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்படுத்தி மறுமலர்ச்சிப் பணிகளை செய்வதே நமது நோக்கம். ஏனெனில் இந்து மதமெனும்சித்தர்நெறிக்குள்:ஆத்திகம் நாத்திகம்,பகுத்தறிவு,விஞ்ஞானம்,பொதுவுடமை,சமத்துவம்,சகோதரத்தத்துவம், சமாதானம்,பொருமை,பொறுப்புணர்வு, கடமையுணர்வு, பாசம், நட்பு, தோழமை, மொழிவிடுதலை, இன விடுதலை, தனிமனித விடுதலை சர்வாதிகார மறுப்பு, சுரண்டல் எதிர்ப்பு, அடிமைப் போக்கு ஒழிப்பு.........முதலிய அனைத்து விதமான தத்துவங்களும், சித்தாந்தங்களும் இருக்கின்றன. எனவே தான், சித்தர் நெறியே இம்மண்ணுலகத்தின் அனைத்து வகையான அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் இவை கடந்த தத்துவங்களுக்கும் சித்தாந்தங்களுக்கும் மூலமாக, முதலாவதாக, தாயாக.........இருக்கின்றது என்ற பேருண்மையினை விளக்கியுரைப்பதே நமது பணியாக இருக்கின்றது அதாவது, நாம் யாரையும் (அ) எதையும் சந்திக்கவோ சிந்திக்கவோ தயாராக இருக்கிருேம், என்பதே நமது நிலை, எனவே, நம்மவர்கள் அனைவரும் இதுவரை கையெழுத்துப் பிரதிகளாகவும், அச்சிட்டவைகளாகவும் வெளிவந்துள்ள அனைத்தையும் பலமுறைத் திருப்பித் திருப்பிப் படித்துக் சித்தர் நெறியை தெரிந்தவர்களாக! அறிந்தவர்களாக! ஆராய்ந்தவர்களாக! புரிந்துதெளிந்தவர்களாக உணர்ந்து நம்புகிறவர்களாக! ஒப்புக்கொண்டு செயலாக்குபவர்களாகப் படிப்படியாக வளர்ச்சி பெற வேண்டும்! வளர்ச்சி பெற வேண்டும்! வளர்ச்சி பெற வேண்டும் அப்பொழுது தான், நம்மால் அமைதி வழியில் அன்பு முறையில் அருள் நெறியில் அனைத்துவகையானக் கறைகளையும், குறைகளையும் முறைகேடுகளையும் வெறிகளையும் அகற்ற முடியும். அதுவே, உலகத்தார், நம்மால் தான் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்க முடியும் என்ற பேருண்மையை நம்புமாறும், ஏற்குமாறும் செய்யும்! புரிந்தும் புரியவைத்தும் செயல் படுங்கள்

தலைமைப் பொறுப்பாளர்;- **சி. கவிக்குமார்**

# இராமகிருட்டிணரியம்

## SRI RAMAKRISHNARISM

மெய்யான இந்துமதம்[The True INDUISM] என்பதுதான் காலப்போக்கில் பல்வேறு அன்னியர்களின் அயராத கலப்பட முயற்சியால் திரிந்தும், சிதைந்தும், மாறியும், வேறுபட்டும், புதியன பல ஏற்றுத்தான் பொய்யான ஹிந்து மதம் [The False HINDUISM] உருவாயிற்று. இதனால்தான், பல தத்துவார்த்தமான கற்பனைகள் [Philosophical Imagination] தோன்றி விட்டன. இந்தக் கற்பனைகளே பயனற்ற சடங்குகளையும்]Useless Rituals], பொருளற்ற பழக்க வழக்கங்களையும்[Meaningless Customs and Manners] உருவாக்கி விட்டன. இதனால்தான், 'உருவ வழிபாடு'[Idol Worship] மதச் சின்னங்களை அணிதல்'[Religious Symbols], 'மத இலக்கியங்களையும் வரலாறுகளையும் புறக்கணித்தல்' [discording the Religious Literatures and History] அனைத்து மொழிகளுக்கும் தெய்வீக சத்தி உண்டு' என்ற பேருண்மையைக் கொன்றிடும் வண்ணம் 'சமசுக்கிருத மொழியை மட்டும் பூசைக்குரிய மொழியாக வற்புறுத்துதல் [Giving religious importance and prominence to the Sanskirit Language as a language of poojas by murdering or degrading the universal religious fact that all the languages have religious importance and divine power]...... முதலிய தவறுகள் தோன்றி விட்டன. இவற்றால்தான் இந்துமதத்தின் மூலம் அருளை அநுபவப் பொருளாகப் பெறுவதும் அருளுலக அநுபவங்களை வழங்கக் கூடிய மதத் தலைவர்கள் தோன்றுவதும், அறிவியல் பூர்வமாக இந்துமதத்தைப் புரிந்து கொள்ள இயலாமல் போனதும் இந்துமதத்தால் பயனில்லையென்று தவறாக எண்ணுபவர் வேற்று மதங்களில் சேருவதும் நிகழ்ந்தன.

அப்படிப்பட்ட காலகட்டத்தில்தான் இராமகிருட்டிணர் உருவ வழிபாட்டால் காளியை (பவதாரினி) நேரில் கண்டு தன்னை அருளூற்றாக்கிக் கொண்டார். இரவு பகலாகச் சுடுகாட்டிலும் புதைகாட்டிலும் அமர்ந்து அருளுலக அநுபவங்களைப் பெற்றார். அவரது மெய்யான இந்துமத அநுபவம்தான், அவரை அனைத்து மதங்களையும் மொழிகளையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் சித்தர் நெறிச் செல்வராக, ஞான சித்தராக, வேதசித்தராக, நவநாதசித்தராக, முதிர்ச்சி பெறச் செய்தது அருள்மிகு இராமகிருட்டிண பரம அம்சரை. ஆனால், அவர் பெயரால் சனாதன தருமமும், வட ஆரிய வேதமதமும், சமசுக்கிருத மொழியும், பிருமண உயர்வும், கற்பனையான பிர்ம்மஞான வாதமும்........வெறியாக வளர்க்கப்படும் நிலைகள் வளர்ந்து விட்டன.

இவற்றால் மீண்டும் போலியான, பொய்யான ஹிந்து மதம் வளருகிறது அதனால், தேவையில்-லாத மத மாற்றங்களும், மதச் சண்டைகளும், சாதிவெறிகளும், ஏற்றத் தாழ்வுகளும், தீண்டாமைக் கொடுமைகளும்........வளர்ந்து விட்டன. இவற்றிற்குக் காரணம் பிருமண ஆதிக்கமும், 'வட ஆரிய வேத மதமும், சமசுக்கிருத மொழி இலக்கியங்களும். வறட்டுத் தனமான தத்துவ வெறியும் தான். எனவே, மீண்டும் நாயன்மார்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள்......வழியில் வந்த இராம கிருட்டிணரின் பத்தி நெறி மதமான சித்தர் நெறி எனும் மெய்யான இந்துமதம் பிழைக்க வேண்டும், கிளைத்துத் தழைக்க வேண்டும். அது தான், இந்துமத மறுமலர்ச்சியைத் தரும். எனவே தான் 1986-ஆம் ஆண்டின் துவக்க மலராக இந்த ஆண்டின் துவக்க மலராக இந்த ஆண்டின் முதல் ''குருதேவராக'' வெளிவரும் சனவரி மாத அறிக்கை 'இராமகிருட்டிணப் பரம அம்சரின் சிறப்பு மலராக' வெளிவருகிறது. இவரை ஞானசித்தர், வேதசித்தர், நவநாத சித்தர், சித்தர் நெறிச் செல்வர், மெய்யான இந்துமத ஆச்சாரியார், காளிதேவியின் அருட்செல்வர், இந்துமத மறுமலர்ச்சிச் சிற்பிகளுள் ஒருவர்........என்று அருளுலகச் சிறப்புக்களை வழங்குகிறோம். அதாவது இன்றைய குவலய பீடம், ஞானாச்சாரியார், குருதேவர், இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்; இராசிவட்ட நிறைவுடையார், நல்லிலக்கண மார்புடையார், ஆத்தாள் அம்பிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அருளாட்சி நாயகம், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் இராமகிருட்டிணர் வாழ்ந்த மெய்யான இந்துமத வாழ்வும்; அவர் போதித்த மெய்யான இந்துமதத் தத்துவமும் ஒருங்கிணைந்த இராமகிருட்டிணரியம் [அல்லது இராமகிருட்டிணரியல் = (The Ramakrishnarism)மீண்டும் உடனடியாக இந்தியா முழுவதும் முளைத்துக் கிளைத்துத் தழைத்துச் செழித்து வளர வேண்டும் என்று அறிவிப்புச் செய்கிறார். இதனைப் புரிந்து அனைவரும் மெய்யான இராமகிருட்டிணச் சாதனைகளை உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படலே இந்துமத மறுமலர்ச்சிப் பணிகளை அணி செய்யும்.

ஓம் திருச்சிற்றம்பலம்

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

நிறுவன நிர்வாகக் குழுக்கள்

'மெய்யான இந்துமதமும் போலியான ஹிந்துமதமும் வரிசையில்.......

பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதத்தில்......''பூசமீன் (நட்சத்திரம்) அருளாளர்கள், கருவறைகள் அருள்பெறும் நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவும் தைப்பூசம் எல்லா வழிபாட்டுக் கருவறைகளும் சமாது ஆனவர்களின் ஆவி, ஆன்மா ஆருயிர்களும் வெளியில் வந்து அருளாட்சி செய்யும் நாள். எனவே, இந்த நாள் சமயத்துறைத் திருநாள். வழிபாட்டு நிலைய விழாநாள். அவ்வளவுதான்!...மானுடர் திருமணம், சடங்கு, புதுமனை புகுவிழா, தொழில் துவக்கல்....... முதலியவைகளை இந்நாளில் செய்யக்கூடாது.....'' ஆனால், பிறமண்ணினரான பிரு-மணர்கள் இதைத் தெரிந்தே தவறுதலாக வழிநடத்த வேண்டி தைப்பூசம் திருமண நாள், பொருளுலக விழாக்களுக்குரிய திருநாள் என்று அறிவித்துள்ளனர். இதனால் பல நலிவு, மெலிவு, இழப்பு, தேக்கம், குறை...... தமிழர்களுக்கு இந்துக்களுக்கு ஏற்படுகின்றன. இதுவே, பிருமணரின் ஹிந்து மதத்தால் விளையும் தீமை. திருந்த வேண்டும் பிருமணர்கள். நம்மவர்களும் உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும் தங்களை.

குறிப்பு:- தைப்பூச நன்னாளில் கோயில்களில் உள்ள எழுந்தருளிச் சிலை (உற்சவர்கள்)களை ஊருக்கு வெளியே எடுத்துச் சென்று ஆற்றுப் படுகைகளிலோ கடலோரங்களிலோ, ஏரிக்கரைகளிலோ, குளத்துக் கரைகளிலோ இரவு முழுவதும் வைத்திருந்து பூசைகளை நிகழ்த்தியப் பின்னர் அதிகாலை கோயில்களுக்குச் கொண்டு வரும் முறை இன்றும் நடைமுறையில் உள்ளது.

---

## வாடிகன் நகரத்து சிவலிங்கம்

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைமை பீடமான வாடிகன் நகரில் அரண்மனை அருங்காட்சியகத்தில் காட்சிப் பொருளாக இப்போதும் ஒரு சிவலிங்கம் உள்ளது

இதன் பூர்வீகம் இந்தியா அல்ல என்பதும் இத்தாலி நாட்டிலேயே கண்டெடுக்கப் பட்ட பழங் காலப் பொருள் என்பதும் வியப்புக்குரியதாகும்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்காலத்தில் இத்தாலியில் வசித்த 'எட்ருஸ்கன்' என்ற பூர்வகுடி மக்கள் 'ஐஸ்வர்' என்ற பெயரில் வணங்கி ஆராதித்து வந்த இந்த லிங்கம் இங்கே நாம் வணங்குவதைப் போலவே அழகான பீடத்துடன் இணைந்து உள்ளது. தவிர அவர்கள் 'டிரினிடி' என்ற தெய்வத்தையும் வணங்கினார்கள்.

நமது நாட்டு 'ஈஸ்வரன்' தான் (சிவன்) அங்கு 'ஐஸ்வர்' என்பதும் 'டிரினிடி' என்பதே மும்மூர்த்தி என்பதும் விளங்குகிறது அல்லவா?

வழங்கல்: சித்தரடியான் முத்துராசமூர்த்தி

நன்றி; தேவி

## இந்துமதம் — ஹிந்துமதம் விளக்கக் கட்டுரை தொடர்-7

இவற்றையெல்லாம், முழுமையாக எண்ணிப் பார்த்த சித்தர் கருவூரர் வழி வந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏனனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையவர்கள் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் கிளை அமைப்புக்களும் பொருத்தமான, திருத்தமான கருத்துப் புரட்சியை விளைவிக்கும் பணியில் மட்டுமே ஈடுபட்டுள்ளன. அப்பணியில் தொடர்ச்சியாகவே நுட்ப திட்ப ஒப்பத்துடன் இந்த கருத்து விளக்கக் கட்டுரையும் அமைகிறது.

பதினெண் சித்தர்கள் இந்து மதத்தின் செல்வங்களாக நான்மறைகள், நான் முறைகள், நாநெறிகள், நான்வேதங்கள் என்ற பதினாறையும் உருவாக்கினார்கள் இவை, இந்துமதத்தின் இயக்குநர்களாக, ஆளுநர்களாக, அரசர்களாக, வழிகாட்டிகளாக ..... விளங்கக் கூடியவர்களுக்கு மட்டுமே. சாதாரணமாக இந்து மதத்தைச் செயலாக்கக்கூடிய (48) நாற்பத்தெட்டு வகையினருக்கும் அருள்மறைகள் 48, பொருள் மறைகள் 64, அருள் முறைகள் 48, பொருள் முறைகள் 64, அருள் நெறிகள் 48 பொருள் நெறிகள் 64, அருள் வேதங்கள் 48, பொருள் வேதங்கள் 64 என்று படைத்தார்கள். இதே போல் மனிதனைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி கடவுள் என்ற பொதுச் சொல்லால் குறிக்கின்ற 48 வகையான வழிபடுநிலையையும் [அல்லா, அத்தா அம்மையப்பா, ஆண்டவர், இறைவர், கடவுள், தெய்வம், பட்டவர், தேவியர், தேவதை, தேவர், அமரர்......] பெறுவதற்காக, ஏட்டுக்கல்வியையும், குருவழிப் பயிற்சிக் கல்வியையும், உருவாக்கினார்கள் இவற்றிற்காக, எண்ணற்ற அத்திற சாத்திற, தோத்திற, நேத்திறங்களையும் நேமநியம நிடத, நிட்டைகளையும், சுருதி ஆரண ஆகம, மீமாம்சைகளையும்; மந்திர, மந்திற, மந்தர, மாந்தர, மாந்தரீகங்களையும், தந்திர, தந்திற, தந்தர, தாந்தர, தாந்தரீகங்களையும், எந்திர, எந்திற, எந்தர ஏந்தர, ஏந்தரீகங்களையும்...... வகை வகையாகப் படைத்திருக்கிறார்கள். பதினெண் சித்தர்கள். இவையனைத்தையும், இருட்டடிப்புச் செய்து ஏமாற்றுவதற்காகவே பிருமணர்கள் அவர்களுடைய ஹிந்து மதத்திற்குரிய பிரமனின் கதையை எழுதியிருக்கிறார்கள். கலைவாணியை உருவாக்கிய பிரம்மன் கலைகளையும் சாஸ்திரங்களையும் படைக்க விழைந்தான். அவனது, நான்கு முகங்களிலிருந்து ரிக் யஜுர், ஸாம அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள் பிறந்தன. பிறகு, தனுர்வேதம், காந்தர்வ வேதம், விஸ்வகர்ம வேதம், முதலியன உதித்தன என்று கூறுகின்றனர்.

பதினெண்சித்தர்கள் இந்த மண்ணுலகம் ஒரு நூறு கோடியாண்டுக்காலம் நெருப்புக்கோளமாக இருந்தபிறகு ஒரு நூறு கோடியாண்டுக்காலம் பனிக்கட்டியாக இருந்தது என்றும் அதன் பிறகே ஒரு நூறுகோடியாண்டு காலம் நீராக இருந்தது என்றும் பின்னரே, ஒரு நூறு கோடியாண்டுகாலத்தில் கல்லும், மண்ணும், தோன்றியதென்றும், இறுதியாக ஒரு நூறு கோடியாண்டு கால இடைவெளியிலே பயிரினங்களும், உயிரினங்களும்,தோன்றியனவென்றும், இந்த மண்ணில் தோன்றிய அனைத்துப் பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும், ஈசர்களாக அதாவது தலைவர்களாக, மனிசர்கள் தோன்றினார்கள் என்றும் அவர்களை பண்படுத்துவதற்காகவே இந்து மதம் இன்றைக்கு 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப்பட்டதுவென்றும், மிகத் தெளிவாகக் கூறுகிறார்கள்.

—தொடரும்

# "குருபத்தியே சித்திக்கு வழி"

[பரமாச்சாரியார் நெ. சேவுகன்]

எல்லாரும் அடியான்களாக, அடியார்களாக, அடியாள்களாகச் செயல்பட இயலாது, விதியும், ஊழும், நாளும் கோளும், முற்பிறவிப்பயனும், குருவருளும், திருவருளும் தான் ஒருவரைக் குருவழி வாரிசாக உருவாக்குகின்றன. எனவே, மேலே கூறப்பட்ட மூவகை அருளாளர்களும் நற்பிறவிப் பயன் காரணமாகவே இப் பிறப்பில் குருவை அடைந்துள்ளோம். இப்படி நாம் பெற்ற குருவை எப்படிக் கண்ணும் கருத்துமாகப் போற்றி வணங்கிப் பயன் படுத்தி நற்பேறு பெறுவது என்பதைப் பற்றித் தெளிவாகவே அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு இந்தக் 'குருபத்தியே சித்திக்கு வழி' என்ற தொகுப்புக் கட்டுரை மிகமிகப் பயன்பட்டிடும்.

குருவிடமிருந்து சில கண்டிப்புக் குருவாணை வந்தவுடனேயே நாம் வருந்துகிறோம். "குருவும் திருவும் ஒன்றே" என்கின்ற போது குரு வழங்கக் கூடிய அனைத்துக் குருவாணைகளும் நன்மைக்கே என்று ஏற்றிடல் வேண்டும். ஆனால் கண்டிப்புக் குருவாணை பெற்றுவிட்டோமே என்றுமனம் தளரவும் கூடாது அதே சமயத்தில் கண்டிப்புக் குருவாணையின் பொருளை மாற்றியும், திரித்தும், வேறுபடுத்தியும், பதுக்கியும், ஒதுக்கியும், நாமாக ஒரு முடிவை எடுத்துக் கொண்டும் செயல்படக் கூடாது அப்படித் தவறாகக் குருவாணைகளை ஏற்றுச்செயல் படுபவர்கள்தான் குருவின் சாபத்தைப் பெற்று; குருதுரோகி என்ற இழிநிலையையும் அடைந்து பற்பல பிறவிகளில் ஆந்தைகளாகவும், பூனைகளாகவும், நாய்களாகவும், நரிகளாகவும், புழுக்களாகவும், காகங்களாகவும், கோவில் மாடுகளாகவும், குரங்குகளாகவும்......பிறந்து அல்லல் பட்டுப்பின் அடுத்த பதினெண் சித்தர் பீடாதிபதி தோன்றக் கூடிய ஆயிரம் ஆயிரம் ஆண்டுகால இடை வெளிக்குப் பிறகுப் பிறக்கிறார்கள். எனவே, 'குருவிடம் விழிப்போடிருப்போரே செழிப்பர்' என்ற குருபாரம்பரிய வாசகத்தை நினைவில் கொண்டு குருபத்தியுடன் செயல்பட வேண்டும். குருபத்தியாகச் செயல்படுகிறோம் என்ற போலி உணர்வும், வஞ்சக எண்ணமும், கபட நடிப்பும் உண்மையான குருவழி வாரிசிடம் ஒரு போதும் இருக்காது. எனவே, நாம் எல்லோரும் உண்மையான குருவழி வாரிசுகளாகத் திகழ வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொன்னை நெருப்பிலிட்டுக் காய்ச்சி உருக்கி அச்சில் ஊற்றியும்; கம்பியாகத் தட்டி, கொட்டி, இழுத்து நீட்டியும், பிறகு வெட்டியும் பொடி வைத்து ஒட்டியும்... ... நகையாகச் செய்து பண்ணிய ஆரம் வைத்துத் தீட்டியும், மெருகேற்றியும் தான் நகை செய்ய வேண்டும். இதே போலத்தான் சித்தர் நெறிச் செல்வர்கள் அதாவது உண்மையான குருவழி வாரிசுகளாகிய நாம் நல்நிலை பெறுவதற்காகக் குருவானவர் பொன்னை, தங்கத்தை நெருப்பிலிட்டு உருக்குவது போல் கடுமையான கண்டிப்புக்களை, சட்ட திட்டக்கட்டுப்பாடுகளை வழங்குகிறார்கள். எனவே யாருக்கும் கண்டிப்போ, சட்டதிட்டக் கட்டுப்பாடோ, எச்சரிக்கைக் குருவாணைகளோ வரும் போது அதனை உரியவர்களும், மற்றவர்களும் இழிவாகவோ, பழியாகவோ, கேவலமாகவோ கருதக் கூடாது, கூடாது கூடாது கூடவே கூடாது.

குருவால் கண்டிக்கப்படுகிறவர்கள், விமர்சிக்கப் படுபவர்கள், குருவால் மறுக்கப்படுபவர்களோ, வெறுக்கப்படுபவர்களோ அல்ல. இப் பேருண்மைகளை நம்மவர்கள் அனைவரும் புரிந்து கொண்டால் தான் குருதேவர் அவர்களின் கண்டிப்புக்கள் உரிய பயனை விளைவிக்கும். அதாவது நமது குருதேவர் அவர்கள் இந்து மதத்தைத் தோற்றுவித்த அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர் பீடாதிபதி என்ற முறையில்; இந்து மதத்தின் தந்தையாக, பிறப்பிடமாக, இருப்பிடமாக கருவாக குருவாக, உயிராக, தருவாக, திருவாக, முடிவுக்கும் முடிவாக இருந்துசெயல்படுகிறார்

-தொடரும்

# அன்புள்ள சேவுக.........!

நண்ப! இன்றைய தமிழக நிலைகளை உற்றுப் பாருங்கள். ஏறத்தாழ எல்லா நிலையினரும்; வகையினரும், தரத்தினரும், நிறத்தினரும்.... அமைதியாக நிம்மதியாக, சமாதானமாக......வாழுகிறார்கள். ஆனால் இது உண்மையான அமைதியில்லை, நிம்மதியில்லை. சமாதானமில்லை. அதாவது, பெரும்பாலான மக்கள் அடிப்படையான (உணவு, உடை, வாழிடம்) தேவைகளுக்காக ஏங்கியும் நொந்தும் வாடி வதங்கி அடங்கி ஒடுங்கிக் கிடக்கிறார்கள். இவர்களும், ஓரளவு (நடுத்தர நிலையினர் Middle Class) வசதியுள்ளவர்களும், தங்களுக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது, எப்படியாவது எதைச்செய்தாவது, தங்களது குடும்பத்தை காப்பாற்றினால் போதும்......... என்ற அச்சத்திலேயே எதைப்பற்றியும் விமர்சிக்காமல், கவலைப்படாமல், நடைப்பிணமாக வாழுகிறார்கள். இந்தப் பேருண்மையை உணர்ந்த அனைத்து துறைத் தலைவர்களும், முன்னணியினர்களும் மக்களை சுரட்டி, உருட்டி மிரட்டி, அச்சுறுத்தியும், இச்சகம் பேசியும், செயல் படுகிறார்கள் இதன்மூலம், இந்தத்தலைவர்கள்——தங்கள் விருப்பம் போல்; பதவி, புகழ், பணம்......... முதலியவற்றைக் கொள்ளையடித்துச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். எனவேதான் நாம் எவ்வளவு எழுதினாலும், பேசினாலும், தொண்டு புரிந்தாலும்......... நம் பக்கம் கூட்டம் சேரவில்லை! நமது இயக்கம் வலுப்படவில்லை!

நண்ப! மேற்படிப் பேருண்மைக்குப் பரிகாரமாகத்தான்; நமது கருகுலம் ஓர் அருளுலகப் பல்கலைக் கழகமாகச் செயல்படப் போகிறது. அதாவது, மருத்துவர், வழக்குரைஞர், பொறியியல் வல்லுநர், எழுத்தர், அதிகாரி...... எனப்படுபவர்களை எந்தப் பல்கலைக் கழகமும் உருவாக்கிட முடியும்; எவர் வேண்டு மென்றாலும் எப்படி யாவது மேற்படி பட்டங்களை பெற முடியும். ஆனால் அருளை அநுபவப் பொருளாக வழங்க வல்ல அருளாளர்கள், நீதிகளை நிலைநிறுத்தும் அருட்பட்டத்தவர்கள், நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு, தொண்டு, கடமையுணர்வு, கண்ணியம், தோழமை அன்பு, நட்பு, முதலிய நற்பண்புகளை விளைவிக்கும் அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல் வீரர்கள்; வழிபாட்டு நிலையங்களை அருளூற்றுக்களாக மாற்றும் அருட்கலை வினைஞர்கள்; மொழியுணர்வு, இன உணர்வு, பொதுவுடமையுணர்வு சமத்துவஉணர்வு சகோதரத்தத்துவ உணர்வு.........முதலியவர்களை நமது குருதேவரால் தான் உருவாக்க முடியும்! உருவாக்க முடியும்! முடியும்! எனவே கருகுலம் எனும் அருட்பல்கலைக் கழகத்தில் [The Divine University] பட்டம் பெற்றவர்கள் தன்னம்பிக்கையையும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும் சமத்துவமும் சகோதரத்துவமும், நட்பும் தோழமையும் பாசஉறவும், அன்பும், பிணைப்பும்.........உள்ளவர்களாக வாழத் தயாராக வேண்டும், தயாராக வேண்டும் தயாராக வேண்டும்.

நண்ப! நல்ல மருத்துவர்கள் என்று தயாராகிறவர்கள்; என்னென்ன நச்சுப் பொருள்கள் இருக்கின்றன; என்னென்ன நல்ல மருந்துகள் இருக்கின்றன......... என்பதைத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இது போலவேதான் யாமும் நல்ல அருளாளர்கள், அருட்கலை வினைஞர்கள், அ.வி.தி. செயல் வீரர்கள், கொள்கை முழக்கப் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள்......முதலியோர் அருளுலகின் ஆக்கக் கலைகளையும், அறிவியல்களையும், அழிவுக்கலைகளையும், குருவருளால் பெற்றுச் சிறக்குமாறு செய்து வருகிறேன். இதில் சாதி மத வெறியோ, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடோ, வேண்டியவர், வேண்டாதவர், என்ற சார்போ.........கடைப் பிடிக்கப் படவே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை ஆனால் நம்மவர்களுக்கிடையில் ஒருவரையொருவர், ஏவல், பில்லி, சூனியம், செய்வினை, வசியம், மரணம், தேய்வு, முடக்கம், நலிவு, முதலிய அழிவு வேலைகளைச் செய்து தாக்கிப் போர்புரிவதாக அச்சமும், ஆச்சரியமும், மாச்சரியமும், அவலப் புலம்பல்களும், குற்றச்சாட்டுகளும் கிளம்பியுள்ளன இதுமாபெரும் சோதனையே! தாங்க முடியாத வேதனையே!..... ...... வருந்துகிறார் குருதேவர்! திருந்துக!

அன்பு,

ஞாலகுரு சித்தர் கருவூரார்



# இந்தியாவில் மார்க்சீயம்-7

—சித்தர்

மற்றொரு இடத்தில் அவர் குறிப்பிடும்போது கடந்த வாரம் முதல் குடும்பத்தாருக்கு உருளைக் கிழங்கும் ரொட்டியும் கொடுத்து வருகிறேன். அதுவாவது இன்றைக்குக் கிடைக்குமா? என்பது சந்தேகமே!..... இவர் ஒரு முறை நூல் ஒன்று எழுதுவதற்கு தனது மேல் கோட்டை விற்றுவிட்டதால் வெளியே செல்ல முடியாமல் ஒரு வாரம் வீட்டினுள்ளே இருந்தார்.......ஆனால், இத்தகு உச்சகட்ட துயர் நிலையிலும் ஜென்னி மார்க்சு தனது ஒரே மகன் இழந்த நிலையிலும் அவர் தனது கணவனின் இலக்கினை அடைவதில் தனது தாபங்களோ! பெருமூச்சோகுறுக்கிடுவதைவிரும்பவேயில்லை

கார்ல் மார்க்சும் எங்கல்சும் 1857 அக்டோபர் முதல் 1858 பிப்ரவரி வரையில் உலகந் தழுவியப் பொருளாதார வீழ்ச்சி, தாழ்ச்சி, சிக்கல் முதலியவைப்பற்றிப் பல ஆய்வுக் கட்டுரைகளை 'நியூயார்க் தின ஏட்டில் காரசாரமாக, கடுமையாக விமர்சனம் செய்து எழுதினார்கள். இவை இவர்களுக்குப் பேரும் புகழும் செல்வாக்கு நல்கின- காரல் மார்க்சு தனது கட்டுரைகளின் மையக் கருத்தை 'அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனத்தின் அடிப்படைக் கூறுகள்' என்ற நூலை எழுதினார். அது ஏறத்தாழ அவருடைய ஐம்பது கட்டுரைகளின் சுருக்கம் இதனை பிற்காலத்தில் அவர் மூன்று பெரும்தொகுதிகளாக எழுதிட்ட 'மூலதனம்' எனும் நூலின் ஒட்டுமொத்த முதல்கூட்டுத் தயாரிப்பு என்று கூடக் கூறலாம்.

பின்னர் 1859 சனவரி முதல் காரல் மார்க்சும் எங்கெல்சும் 'இத்தாலியும் செர்மனியும்.... ஒரு கருத்து ஒற்றுமையோடு புரட்சியில் ஈடுபட வேண்டும்' என்ற கருத்தைத் தெளிவாக, நேரடியாக வெளியிட்டனர். இதற்காகக் பல கட்டுரைகள்' நியுயார்க் தின் ஏட்டில் வெளி வந்தன எங்கல்சு எழுதிய 'பேர் ஆறும் 'ரைன்' ஆறும் என்ற கட்டுரையும் எங்கல்சும் மார்க்சும் எழுதிட்ட சவோய், நிசேரைன்' என்ற கட்டுரைகள் மிகப் பெரிய கருத்துத் தாக்குதலையும், வீச்சையும், எழுச்சியையும் உண்டாக்கின இச் சூழலில் மார்க்சு எழுதிய 'அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய விமர்சனத்துக்கு ஒரு நன்கொடை என்ற நூலின் முதல் தொகுதியை 1860 சூன் முதல் வாரத்தில் அச்சாகி வெளிவரச் செய்தது இவ்வாறு தொடர்ந்து இவரின் கட்டுரைகள் வெளிவரத் துவங்கினதின் பயனாய் பொருளாதாரம் சற்றே இவரின் வாழ்க்கையில் மேலோங்கியது.

கார்ல் மார்க்சு பெரு முயற்சியும் ஈடுபாடும் கொண்டு சூலையில் 'மக்கள் என்ற ஏட்டைச் செர்மானியத் தொழிலாளர்க்காக அவர்களின் உதவியோடு வெளியிட்டார். ஆனால் ஆகசுட்டு 20 இல் முடிவிற்கு வர நேரிட்டது. பொருளாதாரப் பற்றுக்குறையே இந்த ஏட்டின் இறப்பிற்கு காரணமாயிற்று ஆனால் மனந்தளரா மார்க்சு "திரு. யோக்ட்" என்ற வெளியீட்டை கடுமையாக முயன்று வெளியிட்டார். ஆனால் இவ்வரிய பெரியமுயற்சி உரிய பயனை நல்கவில்லை. இதில் பல நல்லதொரு கட்டுரைகள் வாணிகத்தின் நிலையைப் பற்றியும் அதிகார வர்க்கச் சுரண்டல் பற்றியும் சந்தர்ப்பவாதத்தைக் கடுமையாகத் தாக்கியும் எழுதப்பட்டது.

தொடரும்

# எங்களுக்குத் தெரியும்? உங்களுக்குத் தெரியுமா?

கேள்வி: 1. மார்கழி மாதம் பீடை மாதம் என்பது சரியா?
பதில்: மெய்யான இந்து மதத்திற்கும் பொய்யான ஹிந்து மதத்திற்கும் இடையே -யுள்ள வரலாற்று வேறுபாடுகளையும், தத்துவ, சித்தாந்த புராண, இதிகாச, பழக்க, வழக்க, சடங்கியல்.........வேறுபாடுகள், மாறுபாடுகள் முதலிய அனைத்தையும் விளக்கியுரைக்கும் பணி துவக்கப்பட்டு இருப்பதே இந்து மதத்தையும், இந்து மத மூலவர்களான தமிழர்களையும், இந்துக்களையும், காப்பாற்றுவதற்குத்தான். தங்களுடைய கேள்வியின் விளக்கம் இப் பணிக்கு அணி செய்யும்.

நண்பா! ஆண்டுக்குரிய 12 மாதங்களையும் வாரத்துக்குரிய ஏழு (7) நாட்களை -யும் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் ஆண்டுகளின் பெயர் துவக்கத்திலிருந்து மீண்டும் வரும் செயல் திட்டத்தையும் வகுத்தவர்கள் இம் மண்ணுலகின் இயற்கையின் விதிகளை ஆராய்ந்த பதினெண் சித்தர்களும், பதினெட்டாம் கருப்புக்களும் ஆவார்கள் இவர்களின் கருத்துப்படி மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம் தான். எந்த நல்ல காரியம் துவக்க வேண்டுமென்றாலும் இந்த மார்கழியில் தான் துவக்க வேண்டும். அதாவது திருமணம், கால்கோள், விழா, குருகுலக்கல்வி வழிபாட்டு நிலையப்பூசைகள்........முதலிய அனைத்தும் மார்கழி மாதத்தில் தான் செய்ய வேண்டும் என்பது மெய்யான இந்து மதத்தில் சட்டபூர்வமான அதிகாரப் பூர்வமான விதியாகும்,

"பீடு நிறைந்த மாதம் = பெருமைகள் மிகுந்த அரியன செய்தற்குரிய மாதம் வாழ்வியல் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் உகந்த மாதம் "பீட மாதம் = அருட்பீடம், குருபீடம், கருப்பீடம், கருமப்பீடம், திருப்பீடம் ........முதலிய பீடங்களை அமைப்பதற்குரிய குலவளர் மாதம் = அருளுலகுக்கு மிக மிக சிறந்த மாதம்"

அனைத்து வகையான கலை வல்லார்களும் இந்த ஒரு திங்கட்குரிய முப்பது (30) நாட்களும் அதிகாலையில் தங்களுடைய கலைகளைப் பயிற்சி செய்தால் நல்லது அவர்கள் ஆண்டு முழுதுமுள்ள 11 மாதங்களில் பயிற்சி செய்யாவிட்டாலும் பாதகம் இல்லை......என்று இப்படிக் குருவாக்கு, குருவாக்கியம் குருவாசகம், குருபாரம்பரியம் முதலியவை தெளிவாகக் கூறுகின்றன. எனவே, மார்கழி மாதத்தைப் பீடை மாதமென்று வெறுத்து ஒதுக்கும் கருத்தையும், பழக்கத்தையும் புகுத்தியவர்கள் பிற மண்ணினரான பிருமணர்கள் எனப்படும். வட ஆரியர்களே அதாவது இந்த வட ஆரியர்கள் மெய்யான இந்து மதத்தையும், இந்து மத மூலவர்களாகவும், காவலர் -களாக உள்ள தமிழர்களையும் அருள்அற்றவர்களாக, ஆற்றலற்றவர்களாக முறையான பயிற்சியும், தேர்ச்சியும் பெற முடியாதவர்களாகச் செய்வதற்காகத்தான். பொய்யான ஹிந்து மதத்தின் மூலம் மார்கழி மாதத்தை வெறுத்து ஒதுக்கச் செய்தார்கள் இதனை புரிந்து நம்மவர்கள் மார்கழி மாதத்தை சிறப்பாகப் பயன் படுத்த வேண்டும் இனி மேலாவது.

---

தொடர்பு;- தலைமைப் பொறுப்பகம், சி. கவிக்குமார் B Sc,
தலைமைப் பொறுப்பாளர், 56 N G O காலனி, பொன்னேரி-601 204.



# எத்தனை ஐயப்பன்கள்! - 2

—இந்து மதத் தந்தை—

## ஐயப்பனும் ஐயனார்களும்

'ஐயப்பன்' எனும் தேவகுமார நிலை, பிரம்மண நிலை தேவ நிலை, வழிபடு நிலை, சமாது நிலைச்சான்றோர் நிலை ......முதலியவற்றிற்குரிய சித்திமுத்திச்செல்வர்கள் அனைவருமே திருமணமாகாதவர்கள், மனைவியை இழந்தவர்கள், 64 வயதைக் கடந்தவர்கள், உலகியல் காரணங்களால்பெண்ணின்பத்தை வெறுத்தும் மறுத்தும் ஒதுக்கியும் வாழ்ந்தவர்கள். இப்படிப்பட்டவர்களின் சமாதுகள்; அதிக மனித நடமாட்டமில்லாத மலையுச்சிகளில்தான் இருக்கும். இராமாயண காலத்தில் (திரேதகாயுகத்தில்) இப்படிச் சித்தர் நெறிக்கு அப்பாற்பட்ட, இந்துமதம் விரும்பாத பெண்மறுப்பாளர் அருட்கோட்டம், ஆலயம், கோயில்.......முதலிய 48 வகை வழிபாட்டு நிலையங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் வந்தது. சீதையைத் தேடிச் சென்ற இராமன் மேற்குத்தொடர்ச்சி மலையில் அலைந்தபோது சபரி யக்ஞத்தீயில் கருகிச் சாம்பலாகக் காரணமாக இருந்தான்; அதனால் இராவணயுத்தம் முடிந்து திரும்பும்போது சபரியின் ஆலயம் வந்து சென்றான்; சபரிக்கு வெட்ட வெளிக் கருவறை அமைத்தான்; கபாடபுரத்துக் கருவூராரிடம் வேண்டுகோள் விடுத்து இதனைச் சிறந்த அருளூற்றாகவும்; பதினெட்டாம்படிக் கருப்பனின் அருட்கோட்டப்பாதுகாப்புப் பெற்ற ஆலயமாகவும் மாற்றினான். இதனால் முருகன் ஆலயமுள்ள மலைகளில் எல்லாம் ஐயப்பநிலைபெற்றவர்களின் உருவ, அருவுருவ, அருவச்சமாதுகளுக்கு ஒப்புதல் வழங்க நேரிட்டது. ஆனால் அதுவே, ஐயப்பன், ஐயனார் என்ற இருவேறுபட்ட அருள்நிலைகளுக்கும் இடையிலுள்ள பல பேருண்மைகள் கலங்கவும், குழம்பவும் நேரிட்டுவிட்டது.

இக்குழப்பங்கள், அயோத்தித் தசரத இராமன் தனது மனைவியை ஊர்ப்பழிக்கஞ்சிக் காட்டுக்கனுப்பியபின் மீண்டும் சபரி மலைக்கு வந்து சபரியின் தம்பி ஐயப்பனுக்கு வெட்ட வெளிக் கருவறை அமைத்து வழிபடச் சென்றதால்; ஐயப்பன், ஐயனார் என்று இரண்டு வேறுபட்ட, மாறுபட்ட சுத்திநிலைகளைப் பற்றிய பேருண்மைகள் கலங்கிக் குழம்பி ஒன்றாகிட்டன. அதாவது 'ஆலயமும் கோயிலும் ஒன்றாயிடுச்சு;''- அவலக் கேவலங்கள் அருளுலகுக் காயிடுச்சி''என்ற பாடல்வரிகள்போல் ''ஐயனாரும் ஐயப்பனும் ஒன்றாயிடுச்சு; அன்றாடப் பூசையில் கலக்க குழப்பங்கள் மிகுந்திடுச்சு!; அருட்சத்தி சித்தி நிலைகளில் தேக்க ஏக்கங்கள் வந்தாச்சு!; என்ற பாடல்வரிகள் சித்தர்களாலேயே எழுதப்பட நேரிட்டு விட்டது. அந்தந்த ஊரைக் காத்திடக் *குடும்பியாக வாழ்ந்து [*இல்லறத்தார்] சித்தி முத்தி பெற்றுச் சமாது எய்திட்ட ஐயனார்களுக்கு அன்றாடம் நடக்கும் உருமவேளைப் பூசையும், முக்கால வழிபாடும், ஆண்டுத் திருவிழாவும் நலிந்து மெலிந்து செல்வாக்கிழந்து செயல் நலம் குன்ற நேரிட்டதும் ஐயப்பனையும் ஐயனாரையும் ஒன்றாக்கிட்ட குழப்பத்தால் தான் இக்குழப்பத்தைப் பொறுமையாகவும் பொறுப்பாகவும் நல்ல விளக்கங்களையும் அனுபவச் சான்றுகளையும் வழங்கியே சரி செய்ய வேண்டும். ஊர்தோறும் இருக்கின்ற ஐயனார்கள் இல்லறத்தில் சிறந்தவர்கள்; மனைவி மக்களோடு வளமாக வாழ்ந்தவர்கள்; 'பெண்ணின்பமே பேரின்பம்' 'பெண்ணே தாய்த் தெய்வம்' 'பெண்ணே விண்ணையும் மண்ணையும் இணைப்பவள்'.........என்ற சித்தர் நெறித் தத்துவத்தைப் புரிந்து செயலாக்கியவர்கள். எனவே; அந்தந்த ஊர்க்காரர்கள் கார்த்திகை, மார்கழி மாதங்களில் விரதம், தவம், பாடுகிடத்தல் ஆடுதல், பாடுதல்,........முதலிய பூசைகளைச் செய்து தைமாதத்தில் அருட் பெருஞ்சோதியை வணங்கி ஐயனாரின் அருளைப் பெற்றுய்யலாம். எல்லோரும் சபரிமலை ஐயப்பனை வணங்கச் செல்லத் தேவையில்லை. முருகன் கோயிலிருக்கும்மலைகளுக்கு கார்த்திகை மார்கழியில் பூசை செய்து தை மாதத்தில் மலை மீதேறி வணங்கி ஐயப்பன் அருளையும், ஐயனார் அருளையும், முருகன் அருளையும்பெறலாம்.....' என்று கபாடபுரத்துக் கருவூராரின் குருபாரம்பரிய வாசகம் கூறுகின்றது.

எட்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் தாமிரபரணி ஆற்றங்கரைக் கருவூரார் அவர்கள்; பாரதகாலத்தில் [துவாபரயுகத்தில்] இந்த ஐயப்பன் ஐயனார் வழிபாடுகள் பற்றிச் சுருக்க விளக்கக் குருபாரம்பரியக் கருத்து வாசகம் வழங்கியிருக்கிறார்.

1, **''மண்ணுலக இன்பங்களையும் செயல் வெற்றிகளையும் நல்லனவுகளையும் ஊர் தோறுமுள்ள இல்லற வழிச் சித்தி முத்தி பெற்ற ஐயனார் வழிபாட்டால்தான் பெற முடியும், சாதிக்க முடியும் அடைய முடியும்.**

# மணி மந்திரம் மருந்து (ஔடதம்)

**சனவரி மாத தர்மச்சுடரில் (பக் 44) மணி - மந்திரம் ஔஷதம் என்ற தலைப்பில் நண்பர் திரு ராமனுஜன் அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துக் -களுக்கு மறுப்பும் விளக்கமும்.**

வழங்குவது;- **பதினெண் சித்தர் குவலய குருகுல பீடம்.**

மணி மந்திரம் மருந்து என்ற தலைப்பில்தான் பதினெண் சித்தர்களுடைய நூல்களில் சித்த மருத்துவம், சித்தர் மருத்துவம் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் திரு. இராமனுஜன் அவர்கள் தாம் குறிப்பெடுத்த 'பதினெண் சித்தர்கள் வைத்திய சிரோரத்ன நமன காண்டம்' என்ற நூலில் மணி, மந்திரம் ஔஷதம் என்றிருப்பதாகக் குறித்திருக்கிறார். மேலும் சித்தர் மருத்துவமும் சித்த மருத்துவமும் ஒன்றே என்றும் கூறுகின்றார். இது மாபெரும் தவறு! தவறு!! தவறு!!! மிகவும் வருந்தத்தக்கது.

தம்முடைய காலத்திலேயே இப்படிப்பட்ட தவறான கருத்துக்கள், செய்திகள் மக்களைச் சென்ற டையக் கூடாது என்பதற்காகவே திரு. இராமனுஜன் அவர்கள் தர்மச்சுடரில் வெளியிட்டு இருதவறான கருத்துக்களுக்கு உண்மையான விளக்கங்களை வழங்குகிறார் இந்து மதத் தந்தை.

சித்த மருத்துவம், சித்தர் மருத்துவம் இரண்டும் ஒன்றல்ல. சித்த மருத்துவம் வேறு 'சித்தர் மருத்துவம் வேறு.

சித்த மருத்துவத்தில் அனைத்துப் பொருட்களையும் வேக வைத்தோ, எரித்துச் சாம்பலாக்கியோ கொதிக்க வைத்துக் கலந்தோதான்(Chemical reaction) மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன. ஆனால்

சித்தர் மருத்துவம் என்பதில் பசுமையான மூலிகைகள், சிலமண்கள், உப்புக்கள், உலோகங் கள், இறைச்சிகள்......முதலியவை நிழலில், வெய்யிலில் அல்லது மண்ணுக்குள் புதைக்கப்பட்டு பக்கு வப்படுத்தப்பட்டே மருந்துகள் தயாரிக்கப்படும். குறிப்பாக பல பொருட்களை அப்படியே இடித்துத் தூளாக்கிக் கலப்பதுதான் (Compound Mixers) வழக்கம்.

இது பற்றி The Mental duorder and physical duabilities என்று ஒரு சுருக்க விளக்க நூல். நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் எழுதி மத்திய அரசிடமும் மாநில அரசிடமும் தமிழகத்திலுள்ள புகழ் பெற்ற அச்சகங்களிலும் கொடுக்கப்பட்டு அச்சிடப்படாமல் அம்முயற்சி தோல்வியையே சந்தித்தது தங்களிடம் அச்சகம் இருப்பதினால் எதை வேண்டுமானாலும் வெளியிடலாம் என்ற போக்கில் தவறான செய்திகளை மக்கள் மத்தியில் வழங்கித் தமிழ் இனத்துக்கும் மொழிக்கும், நாகரீகத்துக்கும், பண் பாட்டுக்கும் பதினெண் சித்தர் கலை, இலக்கிய மருத்துவத்துக்கும் விரோதமான துரோகமான இம் மாதிரி செயல்களில் இனியும் ஈடுபட வேண்டாம் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் திரு. ராமனுஜன் அவர்கள், மணி: என்பது காலத்தைக் குறிக்கும். அது மருந்து சாப்பிடும் நாள், நக்ஷத்திரம், நேரம், நல்லவேளை இவற்றை கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டனர்.
மந்திரம்; என்பது இறைவனைக் குறித்துச் செய்யப்படும் பூசை அல்லது பிரார்த்தனை.
ஔஷதம்; என்பது உட்கொள்ளும் அல்லது உபயோகிக்கும் மருந்து,

என்றிப்படி த்வறான செய்திகளை குறிப்பதோடு தவறான விளக்கங்களையும் எழுதியுள்ளார். இது மிகவும் கண்டிக்கத் தக்கது.

இது பற்றி பன்னிரண்டாவது பதினெண் சித்தர் அவர்கள் வழங்கிய விளக்கம்,

மணி ; ஒளிக்கற்றைகள் Light rays. இவற்றைப் பயன்படுத்தி சில குறிப்பிட்ட நோய்களுக்கு பல்வேறு வகையான ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்தி நலமளிக்கலாம்.

மந்திரம்; ஒலி அலைகள் Sound waves பல்வேறு வகையான ஒலி அலைகளை உற்பத்தி செய்து (இசைக் கருவிகளின் உதவியுடன்) குறிப்பிட்ட நோய்களைக் குணமாக்கலாம்.

மருந்து ; பொருள்கள் Materials பல்வேறு வகையாக பொருட்களைப் பயன்படுத்தி பல வகைப்பட்ட நோய்களை நலமளிக்கலாம்.

இம் மூன்றையும் தனித்தனி மருத்துவத் துறைகளாக (Differenee branches of the medical Science) வளர்த்தவர்களே பதினெண் சித்தர்கள். இந்த மருத்துவம் தான் சித்தர் மருத்துவம் இனி மேல் தாங்கள் இது பற்றியும், பதினெண் சித்தர்களைப் பற்றியும் எந்த விதமான தவறான செய்திகளை -யும் வெளியிட வேண்டாம் வெளியிட வேண்டாம் வெளியிட வேண்டாம் தங்களின் ஐயங்களுக்கும், சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் விடையளிக்க எங்கள் குருதேவர், பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, இந்து மதத் தந்தை எப்போதும் தயாராகவிருக்கிறார், தயாராகவிருக்கிறார், தயாராகவிருக்கிறார்.

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி



# காளி காயந்திரி மந்தரம்

ஓம் காளி தேவியே காயமே வித்தைகளின் விளைநிலமாக்கிடுக!
தாயே •நீயே தீயாகி மகிழ்ந்திடுக! அருளிடுக!
என்னைத் துன்புறுத்துவனவற்றைப் பிறப்பற்றனவாக்கிடுக!
அநாதி நீயே ஆதிநீயே பாதிநீயே மீதிநீயே
வாழ்த்துகிறோம் வணங்குகிறோம் ஏற்றிடுக காத்திடுக''

இக்காயந்திரி மந்தரமே, இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளிலும் சிலசில திருத்தங்களைப் பெற்றும்; ஒருசில சொற்களை விடுத்தும்; தொகுத்தும்; அளவில் சுருங்கியும் வாழுகின்றது '**இராமகிருட்டிணப் பரம அம்சர் எனப்படும் வங்கத் திராவிடன்** ஓதிய காயந்திரி மந்தரம் தமிழில் உள்ள இந்தக் காயந்திரி மந்தரத்தை அடிப்படையாகக் கொண்டது தான் - என்று [*இ ம இ. யைக் கி.பி 1772 இல் தை மாதத்தில் தைப்பூச நன்னாளில் துவக்கிய] சித்தர் கருவூரார் வழி வந்த கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் குறிக்கின்றார்.

இந்தச் சித்தர் ஏளனம்பட்டியாரே:- 'மகாகவி காளிதாசனும், பட்டி விக்கிரமாதித்தனும், தமிழக மூவேந்தர்களும், இந்தக் காளி காயந்திரி மந்தரம் கூறியே சித்திகளைப்-பெற்றனர் என்ற செய்தி குருபாரம்பரியத்திலும் அரச பாரம்பரியத்திலும் இருப்பதாகக் குறிக்கிறார். எனவே [243] இருநூற்று நாற்பத்து மூன்று வகைச் சத்தி -களுக்கும் இக் காயந்திரி மந்தரம் உயிர் போன்றது. தீயனவற்றை அழிக்கும் வீரம், தீரம், உரம், தரம் ஆற்றல்.........முதலியன தரவல்லது இம் மந்தரம்.

# காளி காயந்திரி மந்திரம்

1. பசிய தலைமாலை பூண்டு ஈசனை வென்றவளே
2. வசிய மண்டையோட்டு மாலைபூண்டு அண்டம் காப்பவளே
3. நசியத் தீமைகளைத் தீய்க்கும் குருதிப்பலி விருப்பத்தாளே
4. ஆத்தாளே! அம்மையே! அன்னையே! தாயே! சத்தியே!
5 மருதக்காளியே! அருவக்காளியே! உருவக்காளியே! அருவுருவக் காளியே!
6 கருக்காளியே! குருக்காளியே! தருக்காளியே! திருக்காளியே!
7 சூலத்தாளே! பாராங்குசத்தாளே! தாமரையாளே! அருட்கையாளே!
8. இருகையே நாலாகி! ஆறாகி! எட்டாகிப் பத்தாகி!
9. பன்னிரண்டாகி! பதினாலாகி பதினாறாகி! பதினெட்டாகி!
10. இருபதாகி! முப்பத்திரண்டாகி முப்பத்தாறாகிடும் கோலமயிலே!
11. சிங்கமமர்பவளே! முக்கண்ணளே! கட்டழகியே! கருமேனியளே!
அருட்சுடரே!

12.. வறுமை யொழித்திடு! தடையுடைத்திடு! சிந்தை காத்திடு!
நெஞ்சு போற்றிடு! வெற்றி வழங்கிடு!

இந்த மந்திரத்தால் மனம் திரப்படும்; மன வலிமை பொலிவடையும்; சிந்தை தெளிவடையும்; சிந்தைத் தெளிவு,செயலில் வலிமையைத் தரும். மனதின் திரத்தால் வாழ்வில் உரமும், தீரமும், வீரமும், பிடிவாதமும், தன்னம்பிக்கையும், அஞ்சாமையும், எதிரிகளைச் சமாளிக்கும் ஆற்றலும், நிதான அறிவும், பிறரை அடக்கியாளும் ஆளுமையும், உண்மையான ஆண்மையும், தோற்ற மிடுக்கும், எடுப்பும்....... விளைந்திடும். பதினெண் சித்தர்கள் பிற அண்டங்களிலிருந்து அழைத்து வந்த (243) இருநூற்று நாற்பத்து மூன்று வகையான சத்திகளில் இவள் ஓர் அரசசத்தியாவாள். அநுபவத்தில் இவளருள் எளியது

**சித்தர் ஏளனம்பட்டியார்**

---

## அறிவிப்பு

புதிய சந்தாதாரர்கள் மட்டுமே இவ்வருடம் சேர்ந்து வருகின்றனர். இவ்வாண்டுக்கு பழைய சந்தா தாரர்களை மீண்டும் புதுப்பிக்கும் முயற்சியில் அனைவரும் ஈடுபட வேண்டுமென வேண்டுகின்றோம்.